உ

திருவல்லிக்கேணி

ஸ்ரீபார்த்தசாரதிப்பெருமாள்பேரில்

பலசரக்குஏலப்பாட்டு.



சென்னை திருவொற்றியூர்

கலைமகள் விலாச அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

1929

௨

கடவுள் துணை.

பலசரக்கு ஏலப்பாட்டு.

வெண்பா

அண்டர்துயர்களைய அவதரித்துபுவிதனிலும்
எண்டிசையோரும்போற்று மீசனே-மண்டபத்து
அரியேநின்மேல் ஏலப்பாட்டுரைக்கவெங்கோவே
சிறியேன்மனதைத் திருத்து

ஏலேலோ குருபாதம்-அம்பாள்
ஏலேலோ குருபாதம்
ஏலேலோ குருபாதம்

விநாயகனே முன்னடவாய் நான்முகன்றன் சரஸ்வதியே - எந்தநாவிலுள்ளேவாருமம்மா - சீர்பெரியும் திருவல்லிக்கேணியனும் புரிதனிலே - வாசமாய்வீற்றிருக்கும்-பார்த்தசாரதியுந் தேவியுடன்-வேதவல்லித் தாயார்க்குக்கப்பல் காணிக்கைகள் - வெகுவிதமாய்ப் பாரமுடன் சரக்குகட்டி-ஓடிவருஞ்சன்னிதிக்கே,

ஐ ரூ ர்.

நாழிகை யொன்றுக்கு நானூறுகப்பல் நாடோறுந் தப்பாமல் தினம்வந்திறங்கும் - சீருடைய படித்துறைக்குக் கப்பல்வருஞ்சேதி சென்னபட்டணக் கோட்டைஜெனங்களெல்லாங் கேட்டுப்பூரித்து ஆனந்த சந்தோஷமாகப் புதுமைகள் பார்க்கவந்து கரைதனிலே நிற்க பாரியவர்த்தகர்கள் செட்டிகோமட்டி |பட்டினத்திலுள்ளகுடி இன்னுஞ்சிலபேர்கள் வேணுமென்ற சரக்குகள் வேண்டியபடிகொள்ள மாட்டுதனில் பணங்கொணர்ந்து வந்தவர்களிங்கே பேரான |பேர்பெற்ற சென்னைபுரியாளும் பெரியதுரை சின்னதுரை யெல்லோருங் கேட்டு நாடாளுமிங்கிலீஷ் கொடிக்காரரெல்லாம் நாலாயிரம் ஜனங்கள் வந்துமேநிற்க ஓடர்தண்ணீரில் லங்கர்கள் பாய்ச்சி ஒரு புறமாய் கப்பலெல்லாங் கரைதனிலேசேர்ந்த வேதவல்லித்தாயார் கடாட்சத்தினாலே வேகமுடன் கப்பல்வந்து சேர்ந்ததையா சுவாமி ஏலேலோ.

பொங்கிவரும் கடலோரந் - தாயார் - பூங்கள்ளாஞ்சன்னிதிக்கே, பங்கள்மாய்ச் சரக்குகப்பல்-இங்கே-வந்திருக்கும் படித்துறைக்கு, நிரம்பிவருஞ் சரக்குகட்டி நிறை

பாரத்துடன் கனத்துவரும், தங்கிவரும் வழிதனிலே-சற்றே-தாமதங்களில்லாமல்,

ஜருர்.

ஏங்கெந்த தீவாந்திரத்திலிருந்து எண்ணிச்சொல்லி முடியாத சரக்குகளைக்கொண்டு பஞ்சவர்ணக் கிளிகொஞ்சும் பங்காளாதேசம் பலவிதமாய் நெல்விளையும் பால்வடியுஞ் சம்பா சிறுமணியும் பெருமணியும் சிறுராசி நெல்லுங் கொடிச்சம்பா மணக்கத்தை குங்குமச்சம்பா கொத்து முத்து சம்பாகுடமல்லிசம்பா மல்லிகைசம்பா மணமுள்ள சம்பா பங்காளதேசத்தில் வாலநீண்டநெல்லும் அனுமந்த சம்பா அளவற்றசம்பா அந்தந்ததேசத்தில் விளைந்துவரும் நெல்லு கடுகுசம்பா மிளகுசம்பா கர்ப்பூரசம்பா கன்னியரிசியுடன் கறுப்புநெல்லரிசி சோளைமலைமழை பொழியும் நல்ல மலையாளதேசம் நல்வெள்ளை நெல்விளையுந் துய்யப்பூசம்பா சகியமாபர்வதத்தில் விளைந்துவருஞ்சம்பா சமுத்திரத்தில் விளைந்துவருஞ் சண்டசம்பாநெல்லுஞ் சாதகோதாவரியில் விளைந்துவருஞ் சம்பா சதுரான் தேசத்தில் விளைந்துவருஞ் சம்பா கன்னியாகுமரியில் விளைந்துவரும் நெல்லு ஸ்ரீரங்கராஜருக்கு விளைந்துவரும் நெல்லு திருவரங்கநாயகிக்கு விளைந்துவருஞ் சம்பா செம்பாளை

பூம்பாளை சுகதாஜியரிசி கல்லுண்டை கார்போகத்தரிசி
கட்டையரிசியுடன் கப்பலிலுள்ள இனுசுமலை துவரை
சிறுதுவரை கடலைபய றுளுந்து மற்றுமுந்த கோதுமை
நவதானியஞ்சோளம் கரிமஞ்சள் பொடிமஞ்சள் காரமு
ள்ளமஞ்சள் கப்பமஞ்சள் சாயமஞ்சள் பங்காளமஞ்சள்
மலைதேன்கள் சிறுதேன்கள் காட்டிலுள்ளதேன்கள் நல்
ல வாய்க்கின்சந்தமொரு தீவதாட்சிகளும் தேன்பாகு
இளை நல்லகற்கண்டு சீனிசர்க்கரையோடுசேர்ந்த நல்ல
வெல்லம் ஈச்சவெல்லம் பனங்கற்கண்டு உள்ளிவெங்கா
யம் காச்சிருக்கும்பிலிச்சக்கை நீரடிமுத்துகள் களிப்பா
க்கு சிறுபாக்கு கல்பாணிபாக்கு கற்றகாம்பு கிலவத்தி
காட்டுகொம்பரக்கு கம்மாறுகைச்சோடு வெற்றிலைகள்
நல்ல கடல்முத்துசுண்ணாம்பு காரமுள்ள புகையிலை சீர
கம் பெருங்காயஞ் சதகுப்பி ஓமஞ் சேர்ந்தமொரு வெந்
தயமும் கொத்தமல்லி விரையும் கடுகுகள் மிளகுகள்
கிளார்ச்சிக்காவலம் கடுக்காய்ப்பூ சிறுலவங்கப் பட்டை
யோடு பத்திரிசுக்குதிப்பிலிமோடி செவியமொட்டுகோஷ்
டம் சடாமாஞ்சி அதிமதுரம் கண்டுபரங்கி சிற்றரத்தை
சிறுதேக்கு செந்தூரம் தும்பராஷ்டம் சிறுநாவல் பூ
வேரோடு குரோசனி ஓமம் மற்றுமந்தவாய்விளங்கம் மயா

ட்டியமொக்கு பரங்கிச்சக்கை கருஞ்சீரகம் காட்டுச்சீரக
மும் அதிமதுரம் லவங்கப்பூ தாளிசபத்திரியும் அக்கிரா
காரங்கள் கடுகுரோகணியும் கர்ப்பூரதினுசுகள் கட்டி சா
ம்பிராணி காரமுடன் மெழுகுகள்கட்டி குங்கிலியம் வெ
ண்காரம் புலிகாரம் படிகாரநவாச்சாரம் இந்துப்பு பாலி
ப்பு சயிந்துப்பு லவங்கம் துத்திநாகத்தோடு செந்தூரம்
பச்சை சித்திரங்களெழுதநல்ல அரிதாரநீலம் ஏலக்காய்
ஜாதிக்காய் வால்மிளகுலவங்கம் ஏற்றமுள்ள சாபத்திரி
ஜாதிக்காய்பட்டை குங்குமப்பூ கஸ்தூரி கோரோசனங்
கள் குமுகுமென்று பரிமளிக்கும் பச்சைகர்ப்பூரம் சந்
தனக்கட்டையின் சட்டங்கள் புனுகு சலவைப்பன்னீர்
கதம்பபொடி அத்தர் பச்சிலையும் கிச்சிலிக் கிழங்குகள்
சந்தனப்பில்லை பரிமளம் வீசிவரும்கஸ்தூரி மஞ்சள் சந்
தனத்தயிலங்கள் சாம்பிராணிவத்தி சம்பங்கிதயிலங்கள்
நல்லெண்ணெ பீப்பாய் ஸ்ரீகந்தம் அகிற்கட்டை தேவதாரி
களும் தீவிலுள்ளசரக்குகள் அபூரூபவஸ்து மலைவேர்கள்
மலையாள சஞ்சீவி நல்ல நிலவேம்பு விஷமுட்டி வேம்பு
சூரணமும் செத்தவரைப் பிழைப்பிக்குஞ் சஞ்சீவி மரு
ந்து வெட்டுண்ட காயங்கள் ஒட்ட நல்லமருந்து வாழாத
பெண்களுக்கு வாழ்வுதருமருந்து மைந்தனில்லா மலடி

க்கு பிள்ளைதருமருந்து கூடாத ஆணும்பெண்ணுங் கூட்டிவைக்குமருந்து குற்றமுள்ள குறைதீற்குங் குணமுள்ள மருந்து ஆணுடனே பெண்பிறந்து அலைந்துகெட்ட பேரை ஆசையுடன் கூட்டிவைக்கும் அந்தரங்கமருந்து தேசாந்திரம்ஓடி திசைகெட்டபேரை சீக்கிரமாய் கொண்டு வந்து சேர்க்குநல்லமருந்து இத்தனை மருந்துவகை இனி சொன்னதினுசு இன்னமின்னஞ் சரக்குவகை இசைவுடனே கப்பலெல்லா மொருவழியே தள்ளி பத்திரமாய் வழிதனிலே தண்ணீரெல்லாந்தாண்டி பலசரக்கு கப்பல் வந்துசேர்ந்துதையாசுவாமி-ஏலேலோ

இன்னமின்னஞ் சரக்குவகை ஏற்றமுள்ள கப்பலிலே எண்ணிசொல்லிமுடியாது கொஞ்சம் சுருக்குமுடன் சொல்லுகிறேன் கப்பலில்வருந்தினுசுகளை நம்மால் கணக்கு சொல்லமாளாது.

ஜருர்.

பட்டுகள்தாபிதா பச்சைபட்டுமுகமல் பங்காளதேசத்து பனியன்களோடும் சாரத்துபட்டி சலவைமல்கள் சரிகைநெய்த புடவைகள் சாயமுள்ளதோம்பு மெத்தைக்குத்தகுந்த நல்லமேல்தட்டு ஜாலர்விதவிதமாய் ரவைபட்டிச்சல்லாவெண்சேலை மேலுக்கழகான மாதளம்பூ

பட்டு மக்காதேசந்தனில் நெய்தவெண்பட்டு பங்காள
பட்டுடன் பஞ்சவர்னச்சேலை அச்சமாய்க் கட்டநல்ல பச்
சை பீதாம்பரம் ஆத்தூரு கழவேற்காடு பாக்குவர்னச்
சேலை ஐதராபாத் முதலான காட்டிபத்திரிசேலை மிஞ்சி
முடிக்கானதொரு கெஞ்சத்துசேலை மேலானமேற்சத்தி
தேசத்துசேலை கெண்டு கோட்டைச் சேலை கொண்ட
தொருகோடி கட்டாரிபட்டு புட்டாவர்னச்சேலை மேலா
ன சவுக்களி ரெட்டைஞ்சிலுங்கி கண்டதொரு புலியூரில்
கொள்ளுநல்லசேலை நிலையங்கிதாரைகள் நீண்டிருக்குங்
குல்லா நிஜாருடன் பாவாடை புருமாலை சவுக்கம் நல
மான ரவிக்கைகள் நாலுவிதம்சீட்டி கார்மடி பட்டுஞ்சு
தோர்மைதக்குங் கித்தான் ஜார்ஜியுஞ்சகலாத்து சன்னதா
வளையல் சட்டமுடன் துப்பட்டி பற்கலாரெக்கு மோகி
க்கு சீமைநூல் மிகவுமனேகம் பட்டணத்திலுள்ள பெ
ண்களுக்கு வாங்கநல்லபுடவைகள் முத்துகள் கல்லுகள்
முத்துரத்னக்கெம்பு மோகன்மாலைகளும் முத்துசரமாலை
நம்பவழம் சாதிலிங்கம் நாலுவிதம்பச்சை நவரத்தினக்
கல்லுகள் நாகரீகரவிக்கை வச்சிரங்கள் வைடூரிய மாணி
க்கநீலம் மஞ்சநீலம்கோமேதகம் புட்பராகங்கள் பலித்
துவிலை கறுப்புகள் மரந்தாளிப்பச்சை மற்றுமந்த கப்புவீ

மேலமுத்துவங்கிதினுசு கோர்வை கொலுசுகளும் கைவி
லிடுமுத்து கோடானகோடி கல்லிழைத்தபாட்டில் அடு
க்குவளை தோள்வளையல் அதூ குண்டுவாங்கி அழகான
பாசிபந்து மையிடும்கொலுசும் கண்டசரப்பளிகள் கடல்
முத்துமாலை கல்லிழைத்தபட்டயங் கழித்திலுடுங்கண்டி
ஆரங்கள் பதக்கங்கள் அட்டிகைகள் நல்ல அதுகளுக்கு
மேலான கரதகண்டிகைகள் காதுக்கு நிறைந்திருக்குங்
கத்திரபாவளுகள் கம்மலிடுஞ் சிமிக்கிசரக் காதுக்கசை
வாளி ஆணிமுத்து கல்லிழைத்த அடுக்குமூக்குகம்பி,
அழகானபுலாக்கு அன்னமூக்குத்தி கலிக்கத்துருவும்
கல்லிழைத்தசுட்டியொடுபட்டியொடுபட்டம்காதுக்குநே
ரான திருநெற்றிசுட்டி சந்திரபிறைசூரியபிறைதலைநிறை
ந்தசாமான்தள்தளெனகாந்தியுடன்தங்கவொட்டியாணப்
பாதசரஞ் சுருள்கொலுசு சிலம்பு தண்டைபாட்டில் பத்
துவிரல் மோதிரங்கள் மிஞ்சியுடன்மெட்டு காதுக்கு
சவுக்களிகள் கல்லிழைத்ததோடி கண்டசரபதக்கங்கள்
முத்திரைகாயம் கல்லிழைத்த பெருங்கடுக்கன் மகரகுண்
டலங்கள் மண்டலத்து ஜனங்களுக்கு வாங்கநல்ல நகை
கள் ஆசாவக்கையெல்லா மணியணி யாய்வைத்து அதற்
கேற்ற பெட்டிகள் பூட்டுகள் சாவி மோருவிராகன் சாணு,

சக்காசி மேலான சீமையார் முத்திரைகள் ரூபாய் ஆதியி
லே உண்டான ஸ்ரீராமர் மேடை அதுகளைச் சார்ந்த
தொரு காசுபணந்தன்னை அரக்கு முத்திரைவைத்து
அடையாளமாகவே காசுபணமெல்லாம் அந்தந்தயிடத்
தில் பத்திரம்பண்ணி சிறுமுத்து பெருமுத்து சிறுசாசி
முத்து தூரத்தில் விளைந்துவருஞ் சுண்டக்காய்முத்து
பருத்த பெருத்தமுத்து பம்பாயி சீமையிலே விளைந்து
வருமுத்து கடைந்தமுத்து உருண்டைமுத்து சுட்டாணி
முத்து கருங்கடலில் விளைந்துவரும் காந்தியுள்ளமுத்து
வாளிமுத்து நீலமுத்து வார்கடைமுத்து வையகத்து
ஜனங்களுக்கு வாங்கநல்லமுத்து நல்ல ஒப்பிலாமாணிக்க
ஜீவரத்தினங்கள் கோவர்த்தனகிரியில் வாங்கிக்கொண்டு
வந்து கோபாலகிருஷ்ணனுக்கு சாத்த நல்ல முத்து
அயோத்தியாபுரியில் வாங்கிவந்தமுத்து ஹரிராமலட்சு
மணர்க்கு சாத்தநல்லமுத்து காசிதேசத்தில் வாங்கிவந்த
முத்து கனமானவர்த்தகர்கள் விலைமதித்தமுத்து பரத
புரிசீமையிலே வாரிவந்த வஜ்ரம்பலமான வர்த்தகர்கள்
விலைமதித்தவஜ்ரம் குடகுதேசத்தில் வாங்கிவந்தகெம்பு
கோடானவர்த்தகர்கள் விலைமதித்தகெம்பு டில்லிதேசத்
தில் வாங்கிவந்தபச்சை தேசத்துவர்த்தகர்கள் விலைமதித்

தப்பச்சை நாலுதேசத்தில் வாங்கிவந்த ரத்தினம் நகர்
சென்னப்பட்டணத்து துறைவந்திறங்க தங்ககட்டி வெ
ள்ளிகட்டி தனித்தனியாய்வரவே தாம்பிரவெங்கலங்கள்
பித்தளை தூருக்கள் இரும்புசட்டமாய்க்கட்டி எழுதுகம்பி
நல்ல இதுகளைச்சார்ந்ததொரு தண்டவாளங்கள் சீமை
மண்ஜாடிகள் வளையலோடு பீங்கான்கள் கிண்ணி திரா
வகம் பிராந்தியும் ஜின்னும் சாராயப்பீப்பாய்கள் தனித்
தனியாயந்த இடங்களிலேவைத்து பச்சைகள் நீலக்கு
ளோப்புகண்ணாடி பச்சையில்பெரிதான பன்னருதுப்பி
கண்ணாடிகதவுகள் கைப்பெட்டிமேஜை கவுச்சிகள் குச்சி
கள் கட்டிலொடுகட்டில் மெத்தைகள் திண்டுகள் பில்லை
கள் தலைக்காணி விதவிதமாய் மேற்கட்டு போகுந்துகை
சாமான் மெழுதுசீலைகூடாரமேக்குகள் வேம்பு விதவித
மாய் சீமைநாய்குல்லாக்கள் சொக்காய் அடுக்குவத்தி
மெழுகுவத்தி அதற்கேற்ற பீடங்கள் அலங்காரகூடங்
கள் மெழுகுவத்திசாந்தம் கைவிளக்கதிகோடி காந்தி
யுள்ளவிளக்கு கண்ணுக்கு அழகான சுகுண்டுவரிசை
சந்துக்கு அழகான சாயபொம்மைகளும் சார்ந்திருக்க
திண்டுகள் சரிகைமேற்கட்டு தங்கமொடு வெள்ளிதட்டு
தாம்பாளம் நல்லசதிருக்கு ஏற்றதொரு ஜாதிக்காய்கிரா

ம்பு வால்மிளகு லவங்கமொடு வண்ணமுள்ளபெட்டி வெற்றிலைமடித்துக் கோர்க்கும் வெள்ளியீர்க்குகளும் வித விதமாய்ப் பன்னிருகுப்பியொடு திண்ணி பட்டுப்பாய் பிரப் பம்பாய் படுத்திருக்கும் பாலிப்பாய் பட்டணத்து துரை களுக்குக் கெட்டித் தாழம்பாய் பட்டுரத்தினக் கம்பிளி கள் ஜோடு ஜமக்காளம் பந்துக்களுக்கு யேற்றதொரு பட்டபிரப்பம்பாய் கண்ணாடி தாம்பிராக்கள் கட்டில்கள் சோபாகாட்டினிலையுள்ள கலைமான்கள் கொம்புதரித் திருக்கும் சவுரிநல்ல வெண்சாமரங்கள் கிருஷ்ணாசனம் பேட்டை புலித்தோல்கள் நல்லஉட்கார்ந்து ஜபம்பண் ணுஞ் சித்திராசனங்கள் பட்டுகுடை வெள்ளிகுடை பச் சைகுடை முத்துகுடை வெள்ளைவேட்டி பாவாடை வெ ள்ளித்தடிகள் வேடிக்கையாகவே கப்பல்வரவே தாளி பனையோலைகள் சீமைகடுதாசி பேனாக்கள் இங்கிபுட்டி பிரப்பந்தட்டு பீங்கான்கோழிகள் சேவல்கள் சிறுராசி பெருராசி ஆடுபலகரைகள் சந்துகள் பாவாடை சாக்கு பித்தளைகள் சட்டமாய்க்கப்பலிலே திட்டமாய்க்கட்டி அஷ்டலட்சுமிபொழியும் ஆனைக்கப்பல் அளவற்றபாக் கியங்கள் குறைவற்றசெல்வம் சீதாலட்சுமிபொழியும் திரு வல்லிக்கேணி நினைத்தவரங்கொடுப்பானந்த வேதவல்லித்

த்தாயார் இஷ்டலட்சுமி கடாக்ஷத்தினாலே ஏற்றமுள்ள கப்பல்வந்து சேர்ந்துதையா சுவாமி ஏலேலோ.

தயார்குழலாள் கப்பலிலே நல்லசஞ்சீவி மருந்து வகை, வையகத்துஜனங்களும் நல்ல வியாதிதீரும் மருந்துவகை, பூமியிலே ஜனங்களுக்கு நல்ல பொன்னுதும் இலேதினுசு.

ஜரூர்.

பேரான ரசவாதபச்சிலைகள் தினுசுபெருவியாதிரோக மறுஞ் சஞ்சீவிமருந்து க்ஷயரோகந் திமிர்வாயு தனுர் வாயுரோகம் கருமேகம் காமாலைமார்நோய் குன்மம் கண் குருடுசெவிடுமை முதலானகால்கள் மொண்டிமுடங்கள் ரணகாயப்படலங்கள் வாங்கும்நல்லமண்டையிடி நொண்டைகட்டு மகத்தானரோகம் மாளாதவியாதிகள் தீர்க்கால் மருந்து திக்குதெரியாத திசைகெட்டபேருக்கு தீவிடஞ் சனம் நல்லசீமை தைலங்கள் தேசத்துஜனங்களுக்கு ஜெயமுள்ளமருந்து தேகமெல்லாஞ்சுந்தரமா யழகுதரு மருந்து உலகத்து ஜனங்களுக்கு உபகாரமருந்து ஒரு நாளும் வியாதிகள் வாராதமருந்து மனிதர்க்கு சீமையில் சாரணைகெட்டபேர்க்கு மதனகாமேசுர அவிழ்த கஞ்சாக் குள் குல்கந்து வில்வாதி லேகியங்கள் யாவும் கிழ்நாடு

மேல்நாடு யெங்கும்பேர்பெற்ற மருந்துவகை யிதுவெல்
லாம் வகைவகையாய் வைத்து மற்றுமந்தக்கப்பலிலே
ஆனைமட்டுஞ்சாமான் கதவுகுழை யிரும்பு சட்டம் கைப்
பிடிகள் வளையம் கட்டிலுக்குத் தொட்டிலுக்கும் மேல்
சட்டசாமான் மற்ற தலைக்கடைகதவுகள் கைப்பிடிக்
குழைகள் வார்த்தூண்கம்பங்கள் வெங்கலப்பட்டங்கள்
காரங்கள் தயிலங்கள் சங்கிலிகள் குப்பி தாவரப்பெட்டி
க்கு நெடுப்பூட்டுச்சாவி காடைவிளக்குகள் நல்ல கை
விளக்குகள் தூக்குமலைகொலுசு தொட்டிலுக்கு சங்கிலி
கள் தோசைக்கல்லு அடுப்பு மண்ணுருவான பாணைக்
கரண்டி மண்வெட்டிகள் நல்லவெட்டு குந்தாலிபிஸ்தோல்
துப்பாக்கிகள் பீரங்கிகுண்டு பல்லயம் ஈட்டிகள் பாங்கு
கட்டாரி கொடியாரமாணிக்கம் குபினிகம்பாரு கணக்கு
விக்கைசொல்ல இட்ட சப்ரதிகள் ஆயுதத்திரள்களும்
அலைமான் துருப்பு ஆழத்தின்மீதறிய நச்சுக்குழல்கொ
ம்பு வலைகள் குதிரைகள் ஆயிரங்காலாள் ஆந்தோளி
மைனாக்கள் பல்லக்குடோலி கோதா கூண்டு வண்டி சக்
கரங்கள் சட்டக் குதிரைகள் பூட்டிய சாரட்டு வண்டிகள்
மரன்கலோடுமயிலுகள்மாடப்புறாவும் மைனாக்கள் வாத்
துகள்பஞ்சவர்ணக்கிளிகள் பால்குறக்குதிசல்லடக்கக்கிளாடு

டெருமைபச்சை வெண்ணைகறந்தெடுக்க மரக்கலோடும் சீமைபெலி பெருச்சாளி சிறுத்தையொடு முயல்கள் தே வாங்கு கருங்குரங்கு சிறந்தபூனைகளும் செந்நாய்க்காடி வெங்கி கொண்டைமுயலும் சீமைநாய் வேட்டைநாய் இன்னமின்னஞ்சாதி கடம்பைகள் உடும்புகள் கோவேறு கழுதை கண்ணுக்கு நிகரான நீர்மனுஷஜாதி விநவித மாய் கப்பலிலே வேடிக்கையாக வேகமுடன் கப்பலிலே விசைபோட்டம் வரவே சிறுமீன் பெருமீன்கள் சிதறி யங்கே இடமிலைபோல் மீன்களெல்லாம் வந்தங்கே நிற்க தவுட்டுதான் கலந்து சமைத்த கொழுகட்டை தாமதங் களில்லாமல் எடுத்து முன்னேபோட்டு அலைகடல் வழி யெல்லாம் ஒரு நொடியில்தாண்டி ஆனந்தக் கப்பல்வந்து சேர்ந்துதையா சுவாமி ஏலேலோ.

சங்கமாபர்வதத்தில் நல்ல சந்தனத்தால் சேர்த்த கப்பல். மண்டலத்து ஜனங்களுக்கு நல்லமாணிக்கக்கு மாதிரிசு, பட்டணத்துஜனங்களுக்கு நல்ல பலவிதமாய்ப் பழதிசு.

ஜரூர்.

சதுர்கட்குசதிரான் எலுமிச்சம் பழங்கள் ஜாதி நார்த் தம்பழச் சக்கரை யன்னசி செவ்வாழைப்பழங்குலைகள்

சேர்ந்தரஸ்தாளி செவ்விள்நீர் முதலான சீமையத்திப்
பழங்கள் கிளிமூக்கு மாம்பழம் மணிபிலா கிச்சிலிவகை
யான மாதளம்பழங்களொடு தினுசுசீத்தாப்பழமும் சொ
குசானசீனி கொடிநாரத்வத சீமை கிச்சிலிகள் கொய்
யாப்பழம் நல்லகொத்து திராக்ஷப்பழம் கொடிதனில்
விட்டுவரும் காட்டுமாம்பழங்கள் பேரீச்சம்பழம் நல்ல
பருப்புகற்கண்டு போனகச்சூரி காய்களொடு தினுசு பட்
டாணி முந்திரிப்பருப்புகள் தினுசு பழவகைகள் தினு
செல்லாம் விதவிதமாய்வைத்து பங்காள கப்பலிலே பணி
யாரதினுசு தொட்டுப்பால்மனோகரம் தேன்குழல் பூரி
யுள்ளுயர்ந்த அதிரசம்பாற் குலம்பு லட்டுசேமாகியென்
பதும் பேணியதுவாகும் தின்னும் வகை பலகார மின்னை
மின்னங்கொண்டு சகிமிண்ட பீரனுக்கு சர்க்கரை மிட்
டாயும் காரமுள்ள பாலன்னந் தயிர்வெண்ணெய் பாலும்
புளியோரை தத்தியன்னம் பொங்கல் வடை தோசை
போகுமாம் அடிசில்செய்யும் இட்டிலிகள் நல்ல சர்க்கரை
பொங்கல் ராசன்னங்களோடு முன்கோசர உண்டை
அக்காரவடிசில்கள் பங்களா பாத்து வேதவல்லித்தாயார் அடி
சில்செய்யும் வகையை விதவிதமாயின்ன தென்று துணைக்
கேட்போமே பார்த்தசாரதிதேவி அடிசெய்யும் வகை

யை பணியாரவகைதினுசு பழதினுசு பலவகைகள் பரி மளங்கள் வீசிவரும் புட்பசவிதசாதி சம்பங்கிபுட்பங் கள் ஜாதிமல்லிகைகள் சரங்களோடு மலைகட்ட குரு வேர்கள் தவனம் பன்னீருபுட்பங்கள் பட்டுசாமந்திகள் பலவிதங்கள் மல்லி செண்பகப்பூ நல்லசெங்கழுநீராம் பல்சிறு செண்பகத்தோடு சேர்ந்தவனமல்லி நீலவர்ன புட் பங்கள் நீலவிருவாட்சி மேலானசுரபுன்னை முல்லைசெந்தா மரை புட்பவகை ஆவாரங்கள் பொட்டணங்கள்கட்டி பேர் பெற்ற கப்பலிலே இன்னுமின்னந்தினுசுகள் தேக்கு நல் தேக்கு நாட்டிஉள்ள மரங்கள் கரிவோடு இரிவோடு கருப்புமான்சாதி வெண்தேக்கு பூந்தேக்கு வெட்பாலை மரங்கள் வேப்பம் நாவல்மரம் காட்டிலுப்பை மரங்கள் சிறுவேங்கை பெருவேங்கை சீமைபனமரங்கள் சேர்ந்த தொரு வயிரங்களானநல்ல பட்டை மச்சுகட்டுமாளி கைக்கு மச்சுவட்டப்பலகை மதசரப்புள்ளிசட்டம் மந் திரிபலகை குதிரைபட்டை குருவிக்காய் குத்துக்கால் சட்டம் கூடத்துக்கம்பளங்கள் சரங்களோடுதூலம் வெ ழல்கூட்டுத் தாவாரங்கள் வாசற்கதவு மாளிகைக்கு நல்ல நல்ல வகைவகையாய் மரங்கள் கட்டிகள் வாச்சிபல ஆளைக்கதவு கீழ்மெத்தை மேல்மெத்தை தாங்கும் நல்ல

சட்டம் அலமாரி கதவுகள் ஆள்களுக்குமணைகள் அழ
கான விசுப்பலகை நாற்காலுமணைகள் மரங்கள் வகை
தினுசெல்லாம் வகைவகையாய்வைத்து மகாகனமாய்
கப்பலிலே வாத்தியங்கள் கோஷ்டம் முகவீணை நாகசுர
விருதுகள் பேரி மேளமொடு தாளங்கள் விருது சின்
னங்கள் தாளமொடு மத்தளம் தருமவாத்தியங்கள் இது
களுக்கு மேலான கிடுகிடுவாத்தியங்கள் காளாஞ்சி துத்
தாரி கனகதப்பட்டை புள்ளாங்குழல் நாதம் பிட்டில்
வாத்தியங்கள் பெருகாளை எக்காளை சாரங்கிவாத்தியம்
பாம்பு நாகச்சுரம் பதினெட்டு வாத்தியம் பாகவதகோஷ்
டங்கள் சங்கீதகீர்த்தனம் வீணையொடுசின்னங்கள் வே
தாந்தவேதியர்கள் தாம்தாமென்றூத அதிர்வேட்டுகள்
புருசு ஆகாசபாணம் அழகானமத்தாப்பு ஐந்துதலை பா
ணம் பொரிபாணம் வெடிபாணம் இடிபாணவித்தை
புட்பபாணம் நல்ல கப்பல்பாணங்கள் சுழல்பாணம் எழல்
பாணம் சீறிவரும்பாணம் சீமையில் செய்துவரும் பல
விதபாணங்கள் கம்பபாணம்நல்ல கையிரண்டும்பாணம்
காந்தியுள்ள நட்சத்திரபாணங்கள் ரீரீயெனப்பேசிவரும்
தவளைபாணங்கள் பாணவகை தினுசெல்லாம் பத்திர
மாய்வைத்து பாங்காக கப்பலிலே பலதேசசரக்கு கொ

சிதேசம் நல்லகுடதேசம் கோகிலமிரதங்கள் கோபுர வாசக்கணறுகள் கர்னூடுதேசம் காஞ்சிபுரம் நல்லகாவேரி தீர்த்தம் கண்ணூறுபாயும் சோழதேசங்கள் மலையாள மொடு மதுரைநெற்கு தேசங்கள் தஞ்சையொடு திரு நெல்வேலி சீமைமண்டலங்கள் துண்டீர நகரங்கள் குற் றாலங் குறநாடு கும்பகோணதேசம் கோதாவரிதீரங்கொ ண்டவட்டி சீமை ஏபாளம் நேபாளம் பங்காளதேசம் வாய்சொல்லு தெரியாத மாறவாடி தேசம் இராச்சியத் தில்செழிப்புள்ள மைசூருதேசம் நடுச்சோழ மண்டல நாகரீகக்காஞ்சி அங்கதேசம் நல்லவங்கதேசம் நல்லகலிங் கைதேசம் கண்ணூடிபாயும் நல்லகல்கத்தா சீமைடில்லி தேசம் நல்ல சிந்துதேசங்கள் கும்புதெரியாததொரு தாணிதேசங்கள் துவாரகாபுரிநல்ல சேத்திராபுரமும் வாரணாசிருக்ஷேத்ரம் கீழ்நாடு மேல்நாடு தென்னாடு தே சம் பற்பலதேசத்தில் சரக்குகள்கொண்டு திக்குதிக்காய் கப்பலெல்லாம் ஒருவழியாய்ச் சேர்த்து ஸ்ரீ ராமஜெய மென்று மெழும்பியே கப்பல் துடுப்புகள் நாட்டியுள்ள ஜலங்களை யொதுங்கிச் சீர்பொழியுங் கப்பல் வருஞ்செய் தியைக்கேட்டுத் திக்குகள்தோறும் வேட்டுகள்போட்டுச்

சிங்கக்கொடிகட்டிச் சிங்காரமாக ஜெயமுள்ள கப்பல் வந்து சேர்ந்துதையா சுவாமி ஏலேலோ.

உலகமெல்லாம் பெற்றெடுத்த அம்பாள் உத்தமி யாள் பத்தினியே மகிமையுடன் தேசமெல்லாம் வந்தரு ளுங் கப்பலிலே.

ஜ ரூ ர்.

மலையாள கொங்குடன் நிலைசேருமுடனே மைசூர் களத்தூரு வந்தேமகிழ்ந்து நலமானகோயிலடி இள்ளங் காடுநேரே கண்டியூர் திருக்காடுபல்லிசெம்பலகை கோல முள்ள திருவையாறு திருத்தாஊர் துறையூர் கொஞ்சும் பசும்பெதிர்கோயில் தஞ்சைநகர் கண்டு தன்னவன் மைக் காவல் உண்மையாய்ப் பார்த்து தானுமாய் பாய்மரம் மூன்றுபதிஞறு நன்மையென்றுந் தேஞறெ சீனிக்கலப்பு நற்பமுடனே சொற்பமாய்ப்பாரு தந்திரம் தானல்ல துப் பாக்கி யீட்டிசீராய் நடுக்கட்டு சொகுசுடனே தூங்கு மஞ்ச சப்ரமுடன் கட்டினார்தாவி அந்தந்த தேசாதிபதி களாகி இஷ்டாங்கமாய்க்கொண்டு சாஷ்டாங்கமாய் வரசு சேகருக்கச்சொல் பந்தியுடனே வந்து இங்கிலீஷ் பிரா ஞ்சுகலக்கட்டு அரைநாலைப்பூட்டு நீர்நெருப்கொண்டே பணிந்தசெதாரு நீரங்கிதிறந்து குமுகமுடன் கப்பலிலும்

சமுகம்நிறைகண்டு தொண்டரெல்லாம் புகழும் வேதவல்லித்தாயார் துரிதமுள்ள கப்பலிலே தப்பாமல் வருகுதப்பா ஏலேலோ.

அதிபதியான அன்னக்கொடி அப்பால் தருமநீதி புண்ணியவதி அம்பாள் கப்பல் கடலோட்டந் தத்தையா அரைநொடியில் வருகுதிங்கே.

ஜ ரூ ர்.

அந்தியசோழ மண்டலமது கடந்து அந்தந்த தேவஸ்தலங்களது கண்டு மும்மாரி மழைபொழியும் கனத்த தொருநெல்விளையும் மற்றுமுள்ள சீமை அவ்வூருக்கப் கப்பலிது ஆனந்தமாக அன்புடனே சுத்திவல்லோ எல்லை துறைதாண்டி இருகாதுகொப்பு இரட்டையொட்டியாணம் இலட்சம் பொன்பெற்றதொரு பச்சைவடங்கொண்டு அந்தம்மனுக்குக் கொடுத்தே பணிந்து கோலமுள்ள கப்பலுக்கு மேலும்வழிகாட்டி சிலமுள்ள கப்பலிது வழிகளெல்தாண்டி சென்னப்பட்டணத்துறைவந்து சேர்ந்ததையா சுவாமி ஏலேலோ.

உத்தமியாள் வேதவல்லி பத்தினியாள் கப்பலிது சித்தமுள்ள பட்டணத்தில் சேர்ந்ததென்று தான்பாட.

ஜ ரூ ர்.

உலகமாதாவே உத்தமிகாமாட்சி உமையவள் தன்னருள் உத்தாரம்பெற்று அமையுமிந்த கப்பலுக்கு சமயமதுபார்தது ஆகாரங் கண்டெடுத்து அடித்தட்டில் சேர்த்து ஸ்ரீகாரங்கண்டெடுத்து சிக்கந்திருப்பி ஆகாரங்கண்டெடுத்து கப்பிகயர்மாட்டி நமச்சி வாயங்கொண்டு நங்கூரம்பாய்ச்சி நாலுவேதத்திற் பீரங்கியேற்றி அஷ்டாட்சாத்திலே காற்றுகளும் பாய அம்மனுடன் கப்பலிது விஸ்தாரமாக அன்பாகக் கணபதியை முன்பாகவைத்து அந்தமுடன் கப்பல் வந்து சேர்ந்ததையா சுவாமி ஏலேலோ.

கப்பலென்றால் கப்பலிது கப்பல்வரும் பருவதினால் ஜனங்களதுகரைபுரண்டு குமிளமிடும் இருகரை நீர்பெருகி தத்தையா ஏகஜலம் வந்திடுமாம் வேதவல்லியுதையறிந்து அம்மன்கால் வரிசை எச்சரித்தாள்.

ஜ ரூ ர்.

காவேரித்தானறிந்து வேதவல்லித் தாய்மேல் கட்டிசம்வைத்து கப்பல்தனை துறைகொணர்ந்து சேர்க்கரைபுரண்டு காவேரி வெகுவெள்ளம் வரவே அம்ம

னிடதன்மகிமை ஆரறிவாரென்று ஆதிரங்கர் சந்நிதிக் குப் பின்பாகமேவதான் அலைவந்து மோதவே கரைதனி லே யொதுக்கி உத்தரபாரீசம் ஒருபக்கந் திரும்பி ஒங் காரமாகவே உருண்டைமணல் வாரிசத்தமிட்டுத் தந் தனித்து தான்புரண்டு கப்பல் சதாகாலம் அம்மனை சிந் தைதனிலெண்ணி வேதவல்லித் தாயார் கடாட்சத்தினு லே வேகமுடன் இங்குவந்த கப்பலிது கண்டீர் ஏலேலோ

வாழியவே வாழியவே சுத்தமகமேரும் வாழியவே ஈஸ்வரரும்பார்வதியும் தந்தையர் இன்பமுடன் வாழிய வே மகாவிஷ்ணு லட்சுமியும் கோவிந்தர்மண்டலத்தில் வாழியவே பிர்மாவு சரஸ்வதியும் தந்தையர் பூமிதனில் வாழியவே.

ஜருர்.

தேவேந்திர னிந்திராணி தேவர்களும் வாழிநிற முள்ள முனிவர்களும் சித்தர்களும்வாழி முப்பத்துமுக் கோடி தேவர்களும்வாழி முதலான நாரதரும் கிம்புரு டர்வாழி நாற்பத்தெண்ணாயிரம் ரிஷிகளும் வாழி கல முள்ள் கருடகாந்தருவர்வர்களும் வாழி விக்கின விநாய கரு நித்தமேகவாழி வேலவரும் பத்தினிகளிருவர்களும் வாழி ஸ்ரீரங்கநாயகரும் ரங்கநாயகியும் ஜீவகாரணரான

பார்த்தசாரதியும் சீரான வேதவல்லித்தாயாரும் வாழி
சென்னைபுரி ஆளுகின்ற துரைமார்கள் மென்மேலும்
எந்நாளும் வாழிமிகவாழி சூப்பரீங் கோர்ட்டிலுள்ள
துரைகளெல்லாம் வாழி துருப்பிடித்து வழக்கெடுக்கும்
எல்லட்டும் வாழி இன்னுஞ்சில தேசங்களை ஆளுகின்ற
ராசர் இணையில்லாத செல்வங்கள் பெற்றுமவர் வாழி
சீலமுள்ளசுப்பல்கவி சற்றவர்கள்கேட்டோர் சிறப்
பாய் படிப்போர்கள் ஜெயம்பெற்றுவாழி மேலான ரிக்
கதை அச்சிதனிலிட்டோர் மேலுமேலுமெந்நாளுமிக
வாழி.

ஏலேலோ குருபாதம்-அம்பாள்
ஏலேலோ குருபாதம்.

பலசரக்கு ஏலப்பாட்டு.

முற்றிற்று.

சென்னை திருவொற்றியூர் கலைமகள் விலாசம் பிரஸ்.